பக்கங்கள் 25

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | மாசி 07 வியாழக்கிழமை 19.02.2026 | அதிர்வு 203

## புனித நோன்பு இன்று ஆரம்பம்

இலங்கை வாழ் முஸ்லிம்கள் இன்று வியாழக்கிழமை முதல் தமது புனித ரமழான் நோன்பை ஆரம்பிக்கவுள்ளனர் என்று கொழும்பு பெரிய பள்ளிவாசல் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. 05▶



# அரசியல் நாடகங்களால் அநுர அரசு தடம் புரளாது!

## பீரிஸ் - நாமல் சந்திப்பை போட்டுத் தாக்கும் நளிந்த

பிளவுபட்டுள்ள எதிர்க்கட்சிகள் எத்தனை தடவை ஒன்றுகூடினாலும் தேசிய மக்கள் சக்தி அரசின் தூய்மையான அரசியல் பயணத்தை அவர்களால் தடுக்க முடியாது என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மக்கள் குரல் அமைப்புக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும்இடையில்நேற்றுபத்தரமுல்லையிலுள்ள 'நெலும் மாவத்தை' கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற சந்திப்பு தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 05▶

# எங்களை விமர்சிப்பதை விட்டுவிட்டு பாதாள உலகைக் கட்டுப்படுத்துங்கள்



## அநுர அரசிடம் நாமல் வலியுறுத்து

"சமூக கட்டமைப்பில் பாதாளக் குழுக்களின் செயற்பாடு தீவிரமடைந்துள்ளது. எம்மை விமர்சித்துக் கொண்டிருக்காமல் பாதாள உலகக் குழுக்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்." – என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ, அநுர அரசிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளைகள், மற்றும் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே 05▶




அரசியலில் இருப்பவர்கள், பொது வாழ்வுக்கு வந்தவர்கள். அவர்களுக்கு எதிராகக் கருத்தாடல்கள், விமர்சனங்கள் தாராளமாக வரும். அவர்களின் செயற்பாடுகளைக் கண்டித்தும், திட்டியும், பாராட்டியும் கருத்துக்கள் முன் வைக்கப்படும். அவற்றை உரிய முறையில் – தகுந்த வழியில் – சட்ட ரீதியாக எதிர்கொள்வதுதான் நியாயமானது.

கருத்துக்களைக் கருத்துக்களால் மோத முடியாத அல்லது சட்ட ரீதியாக எதிர்கொள்ள இயலாத அரசியல் தரப்புகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் தற்போதைய சமூக ஊடக ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு கீழ்த்தரமான – சட்ட முரணான – அபாண்டமான – வகையில் எதிர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

வெளிப்படையாகவும் 05▶



# பிரிட்டன் எப்போதும் துணையாக நிற்கும்!

## தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் உறுதியளித்தார் டேவிட் லம்மி









இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரித்தானிய துணைப் பிரதமர் டேவிட் லம்மி மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஆண்ட்ரூ பேட்ரிக் ஆகியோருக்கும், தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பில் நடைபெற்றது.

இச்சந்திப்பின் போது, ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ளும் தேசிய இனப்பிரச்சினை மற்றும் அதற்கான நிரந்தர அரசியல் தீர்வுத் திட்டங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக, இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி மற்றும் தமிழ்ச் சமூகம் அன்றாடம் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து தமிழ்ப் பிரதிநிதிகள் பிரித்தானிய தூதுக்குழுவினருக்கு விளக்கமளித்தனர்.

அர்த்தமுள்ள முன்னேற்றங்களுக்கு ஆதரவளிக்கவும், நீதி மற்றும் சமத்துவத்தை ஊக்குவிக்கவும் ஐக்கிய இராச்சியம் உறுதியாக இருப்பதாக துணைப் பிரதமர் டேவிட் லம்மி இதன் போது தெரிவித்தார்.

மேலும், தமிழ் மக்களின் குரல் சர்வதேச மட்டத்தில் தொடர்ந்து ஒலிப்பதை உறுதி செய்யும் விடயத்திலும், இன நல்லிணக்கம் மற்றும் நீதியை நிலைநாட்டும் விடயத்திலும் தமிழர்களுடன் பிரித்தானியா எப்போதும் துணை நிற்கும் எனவும் அவர் உறுதியளித்தார்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வம் அடைக்கலநாதன், இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.




# சஜித் - நாமலை இணைக்கும் பாலமாகிறாரா ஜி.எல். பீரிஸ்?

## தெற்கு அரசியல் களத்தில் புதிய திருப்பம்







மக்கள் குரல் அமைப்பின் தலைவர்களுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று புதன்கிழமை பத்தரமுல்லையிலுள்ள ‘நெலும் மாவத்தை’ கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் மற்றும் எதிர்கால அரசியல் நகர்வுகள் குறித்து இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சார்பில் அதன் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ, பொதுச்செயலாளர் சாகர காரியவசம், பாராளுமன்ற உறுப்பினர்களான சி.பி. ரத்நாயக்க மற்றும் சஞ்சீவ எதிரிமான்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

மக்கள் குரல் அமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் மஹிந்த அமரவீர, பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் ஐக்கிய மக்கள் கட்சியின் தலைவர் டிரான் அலஸ் உட்பட பல தலைவர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

பேராசிரியர் ஜி.எல். பீரிஸின் ஒருங்கிணைப்பில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பேராசிரியர் பீரிஸ் உள்ளிட்ட எதிர்க் கட்சிப் பிரதிநிதிகள் அண்மையில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 21ஆம் திகதி நுகேகொடையில் ‘மகா மக்கள் குரல்’ என்ற பெயரில் முன்னெடுக்கப்பட்ட பிரம்மாண்ட பேரணியைத் தொடர்ந்து, தற்போது கட்சித் தலைமையகத்தில் இந்த முக்கிய சந்திப்பு இடம்பெற்றுள்ளமை அரசியல் களத்தில் விசேட கவனத்தைப் பெற்றுள்ளது.

# நாட்டில் சட்டத்தின் ஆட்சி கேள்விக்குறி! குற்றவாளிகளுக்கு அரசு பச்சைக்கொடி!!

## ஐக்கிய மக்கள் சக்தி கடும் தாக்கு



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசு, தனது அரசியல் இலாபத்தை ஈட்டிக் கொள்வதற்காக இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டிவிடுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம். பி. குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிட்ட தாவது:-

“அதியுயர் பாதுகாப்பு வலயத் துக்குள் சட்டத்தரணி தம்பதிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட துப்பாக்கிப் பிரயோக மானது, நாட்டின் சட்டத்தின் ஆட்சியைப் பாரிய கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயம் அல்ல என்றும், இது ஒரு தனிப்பட்ட ரீதியிலான சம்பவம் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கூறுவது வேடிக்கையாகவும் நகைப்புக்குரியதாகவும் உள்ளது.

அமைச்சரின் இத்தகைய பொறுப்பற்ற கருத்துக்கள், திட்டமிடப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் குழுவினருக்கு அரசு வழங்கும் ஒரு ‘பச்சைக்கொடி’ போன்றதாகும்.

பட்டப்பகலில் மக்கள் நடமாடும் வீதிக ளில் அரங்கேற்றப்படும் கொலைகளை, “இயற்கையான நிகழ்வுகள்“ எனக்கூறி நியாயப்படுத்த அரசு முயல்கின்றதா என்ற கேள்வியை எழுப்ப விரும்புகின்றோம்.” – என்றார்.

நாட்டில் நிலவும் பாதுகாப்பற்ற சூழ லைச் சுட்டிக்காட்டிய அவர், நடப்பு ஆண்டின் கடந்த சில நாட்களில் மாத்திரம் சுமார் 9 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ள னர் என்ற தகவலையும் வெளியிட்டார். இவ்வாறான குற்றச் செயல்களைக் கட்டுப் படுத்தத் தவறியுள்ள அரசு, மக்களைத் திசைதிருப்பும் நோக்கில் செயற்பட்டு வருகின்றது என்றும் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. மேலும் தெரிவித்தார்.

# துப்பாக்கிக் கலாசாரத்துக்கு பலியாகும் தொழில் வல்லுநர்கள்

## அரசின் பாதுகாப்புப் பொறுப்பை கேள்விக்குட்படுத்தும் வைத்தியர்கள்

கொழும்பில் சட்டத்தரணி மற்றும் அவரது மனைவி சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவமானது, இந்த நாட்டில் பொதுமக்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் பாதுகாப்பு குறித்து மீண்டும் ஒரு பாரிய கேள்விக்குறியை எழுப்பியுள்ளது அரச வைத்திய அதி காரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையிலேயே இவ்விடயம் வலியுறுத் தப்பட்டுள்ளது.

“பொதுமக்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் பாதுகாப்பை உறுதி செய்வது எந்தவொரு அரசினதும் அடிப்படைப் பொறுப்பாகும். தத்தமது துறைகளில் ஈடுபடும் நிபுணர்கள், எவ்விதமான மிரட்டல்கள் அல்லது அச்சுறுத்தல்கள் இன்றி சுதந்திரமாகச் சேவையாற்றுவதற்கான உரிமை உறு திப்படுத்தப்பட வேண்டும்.” – என்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.




சட்டத்துறையைச் சேர்ந்தவர்கள் மீதான இத்தகைய தாக்குதல்கள், ஏனைய துறைசார் வல்லுநர்கள் மத்தி யிலும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவித்துள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், நாட்டின் வைத் தியசாலை கட்டமைப்புக்குள் வைத்தி யர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்க ளின் பாதுகாப்பு தொடர்பிலும் தற்போது பாரிய சிக்கல்கள் உருவாகியுள்ளன என்றும் கவலை வெளியிட்டுள்ளது.

குடிமக்களின் பாதுகாப்பை உறு திப்படுத்துவதோடு, தொழில் வல்லு நர்கள் அச்சமின்றிப் பணியாற்றுவதற்கு ஏற்ற வலுவான மற்றும் நம்பகமான பாதுகாப்பு வழிமுறையொன்றை அரசு உடனடியாகச் செயற்படுத்த வேண்டும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தனது அறிக்கையின் மூலம் வலியுறுத்தியுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

சட்டத்துக்கு உட்பட்டும் எழுதுகின்ற எனக்கு எதிராகவே சமூக ஊடகங்களில் தங்களை அடையாளப்படுத்தி, வெளிப்படுத்தாத – அடையாளப்படுத்தத் திராணியற்ற – பொறுப்புக் கூறும் கடப்பாட்டை எதிர்கொள்ளும் முதுகெலும்பு இல்லாத – சில தற்குறிகள் அபாண்ட விமர்சனங்களையும், பொய்ப் பிரசாரங்களையும், அவதூறுகளையும் பரப்பி வருகிறார்கள் என்பதை ஏற்கனவே சுட்டிக் காட்டி இருந்தேன்.

இப்போது முரசு பத்திரிகையில் அரசியல் கருத்துக்களை எழுதி வருகின்ற ஒரு பத்தி எழுத்தாளருக்கு எதிராகவும் சமூக ஊடகங்கள் வாயிலாக அவதூறு பரப்பும் சின்னத்தனம் இடம்பெறுகின்றது.

கடந்த ஒரு வார காலத்துக்கு முன்னர் நீர் கொழும்பில் மோட்டார் கார் ஒன்றை வாடகைக்குப் பெற்று, அதனைப் பயன்படுத்திய ஒருவர் காரை அடகு வைத்து விட்டு மாயமான விவகாரம் பற்றிய செய்தி சில ஊடகங்களில் வெளியாகி இருந்தது.

அந்தச் செய்தியை அப்படியே கொப்பி அடித்து, அதன் கடைசியில் இந்த சம்பவத்திற்கும் ஊடகவியலாளர் ஒருவருக்கும் தொடர்பு என முரசு பத்தி எழுத்தாளரின் படத்தோடு சமூக ஊடகங்களில் ஒரு செய்தி பரப்பப்பட்டு வருகின்றது.

மேற்படி வாடகைக் கார் சம்பவத்துக்கும் பத்தி எழுத்தாளருக்கும் எந்தச் சம்பந்தமுமே இல்லை.

குறிப்பாக தமிழ் அரசியலில் ஒரு பிரமுகர் குறித்து மட்டும் கண்டித்து அல்லது அவரது செயற்பாடுகளை விமர்சித்து எழுதுகின்ற ஊடக தரப்பினருக்கு எதிராகத்தான் இத்தகைய அபாண்டப் பிரசாரங்கள் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றமையைப் பார்க்கின்ற போது, அந்த அரசியல்வாதி அல்லது அவரது ஆதரவாளர்கள் அல்லது அல்லக்கைகள்தான் இப்படி சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி கீழ்த்தரமான எதிர் நடவடிக்கைகளை செய்து வருகின்றன என்ற சந்தேகம் தான் அதிகம் எழுகின்றது.

இப்படித் தனக்கென ஓர் அணியை வைத்து, சமூக ஊடகங்கள் வாயிலாக பிறழ்வான பிரசாரங்களை முன்னெடுப்பதன் மூலம் அரசியல் லாபம் ஈட்டலாம் என்று எதிர்பார்த்தால், அது பூமராங்காக வந்து, திரும்பத் தாக்கும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினர் உணர்ந்து கொள்வது நல்லது.

முரசோ அல்லது அதில் எழுதுகின்ற பத்திரிகையாளர்களோ இப்படி சமூக ஊடகங்களை கையில் எடுத்து அவதூறு – அபாண்ட – பிரசாரம் செய்பவர்களைக் கண்டு பயந்து வாயடைத்து தங்கள் பேனாக்களை மூடிக்கொண்டு போய்விடுவார்கள் என்று இந்த அரசியல் தரப்புகள் எண்ணுமானால் அதனைப் போல முட்டாள்தனம் வேறு இருக்க முடியாது என்பதை சொல்லி வைக்க விரும்புகிறேன்.

## அரசியல் நாடகங்களால்...

“கடந்த காலங்களில் வெவ்வேறு கொள்கைகளுக்காகப் பிரிந்து சென்றவர்கள், தற்போது தேர்தலை இலக்கு வைத்து மீண்டும் ஒன்றிணைவது மக்கள் நலனுக்காக அல்ல, மாறாகத் தங்களின் அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவே.

நேற்று வரை ஒருவரை ஒருவர் விமர்சித்துக் கொண்டிருந்தவர்கள், இன்று ஒரே மேசையில் அமர்ந்திருப்பது கொள்கைக்காக அல்ல. மாறாக, தேசிய மக்கள் சக்தி அரசு முன்னெடுத்து வரும் ஊழலுக்கு எதிரான விசாரணைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளவே இந்த அவசரக் கூட்டணிகள் உருவாக்கப்படுகின்றன. மக்கள் இவர்களை ஏற்கனவே நிராகரித்துவிட்டனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கிய தெளிவான ஆணையைச் சிதைக்க இவ்வாறான ‘நெலும் மாவத்தை’ சந்திப்புகள் முயற்சிக்கின்றன. ஆனால், பிளவுபட்டுள்ள எதிர்க்கட்சிகள் எத்தனை தடவை ஒன்று கூடினாலும், தற்போதைய அரசின் தூய்மையான அரசியல் பயணத்தை அவர்களால் தடுக்க முடியாது.

பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் போன்றவர்கள் ஒருபுறம் சஜித் பிரேமதாஸவைச் சந்திக்கின்றார்கள், மறுபுறம் ராஜபக்ஷக்களின் தலைமையகத்துக்குச் செல்கின்றார்கள். இவர்களுக்கு நிலையான கொள்கை கிடையாது. இவர்களின் நோக்கம் மீண்டும் அதிகாரத்தைப் பெற்று, தங்களின் பழைய சலுகைகளைப் பாதுகாப்பதே தவிர, மக்களின் குரலாக ஒலிப்பதல்ல.

இவ்வாறான அரசியல் நாடகங்களால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு தடம் புரளாது. திருடப்பட்ட மக்கள் சொத்துக்களை மீட்கும் பணியும், ஊழல்வாதிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளும் எவ்விதத் தடையுமின்றித் தொடரும்.” – என்றார்.

## புனித நோன்பு...

ஹிஜ்ரி 1447ஆம் ஆண்டிற்கான புனித ரமழான் மாதத்தின் தலைப்பிறையைத் தீர்மானிக்கும் மாநாடு, நேற்று புதன்கிழமை மாலை மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை, கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாகிகள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள், கொழும்பு மேமன் சங்கப் பிரதிநிதிகள், வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் உலமாக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் ரமழான் மாதத்துக்கான தலைப்பிறை தென்பட்டமை குறித்துக் கிடைக்கப் பெற்ற ஆதாரபூர்வமான தகவல்களைத் தொடர்ந்து, பிறைக் குழுவினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதன்படி, நேற்று இரவு முதல் பள்ளிவாசல்களில் விசேட ‘தராவிஹ்’ தொழுகைகள் ஆரம்பமாகின. இன்று முதல் புனித நோன்பு ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் இறைவனை வணங்கி, ஈகைப் பண்பை வளர்க்கும் இந்த மாதத்தை இலங்கை முஸ்லிம்களும் பக்தி உணர்வுடன் வரவேற்கத் தயாராகியுள்ளனர்.

## எங்களை...

அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

“விவசாயிகளைப் பலப்படுத்தி நாட்டு மக்களின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதாகக் குறிப்பிட்டே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால் விவசாயிகள், மீனவர்களை பலப்படுத்தாமல் வெளிநாட்டில் இருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து வர்த்தகர்களை பலப்படுத்துவதையே அரசு செய்கின்றது. இப்போது வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றது.

ஒரு பேனையில் அரிசி மாபியாவை இல்லாமல் செய்வதாகக் கூறினர். ஆனால் இப்போது நடப்பது வேறு. டித்வா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான நட்டஈடு வழங்கப்படவில்லை. வீடுகள் வழங்கப்படவில்லை. 100 இலட்சம் ரூபா வழங்குவதாகக் கூறினர். பொய்யை நாடாளுமன்றத்துக்குள் கூறினர்.

விவசாயிகள், மீனவர்களைப் பாதுகாக்காமல் – உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் இந்த அரசால் பயணிக்க முடியாது. ரில்லியன் ரூபா நிதி கையிருப்பில் இருப்பதாகக் கூறினர். அதில் நட்டஈட்டை வழங்குவதாகவும் குறிப்பிட்டார்கள். ஆனால் வழங்கிய காசோலைகள் திரும்பி வருகின்றன. வழங்கிய வாக்குறுதிகளை அரசு நிறைவேற்ற வேண்டும்.

கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய பாதுகாப்பு தொடர்பில் கதைக்கின்றீர்கள். போர்க் காலத்திலும் இங்கு கிரிக்கெட் போட்டிகள் நடந்துள்ளன. ஆனால் நீங்கள் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளதாகக் கூறும் நிலையில் உங்கள் கட்சித் தலைமையகத்துக்கு அருகில் – இராணுவத் தலைமையகத்துக்கு அருகில் பாதுகாப்பு பிரதேசத்தில் துப்பாக்கிச்சூடு நடக்கின்றது.

இது குறித்து அரசின் பதில் என்ன? சட்டத்தரணி கொல்லப்பட்ட பின்னர் திட்டமிட்ட குற்றக் கும்பல் சார்பாக ஆஜராகும் சட்டத்தரணி என்று அரசு பதிலளிக்கின்றது. அப்படியென்றால் நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவும் சட்டத்தரணியே. அவரின் சேவை பெறுநர் யார்? அவரும் திட்டமிட்ட குற்றக்கும்பலுக்காக முன்னிலையாகியுள்ளார். அது அவர்களின் தொழில்சார் கடமையே. இவ்வாறான நிலைமையில் சட்டத்தரணி கொல்லப்படும் போது அந்தக் கொலையை ஒருங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் மீது சுமத்தி நியாயப்படுத்த முயற்சிக்கின்றனர்.

சில ஒருங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களின் பின்னால் அரசு இருக்கின்றது என்பது தெளிவானது. அது பெலவத்த அலுவலகத்தில் இருந்தா? ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்தா? பிரதமர் அலுவலகத்தில் இருந்தா நிர்வாகிக்கப்படுகின்றது என்று எமக்குத் தெரியாது.

பிரதமர் மன்னார் சென்றிருந்தார். யுத்தம் தங்களிடம் கேட்டுச் செய்யவில்லை என்று கூறியுள்ளார். 1988 மற்றும் 1989 காலங்களில் நடந்த சம்பவங்கள் எங்களிடம் கேட்டா இடம்பெற்றது. பயங்கரவாதமும் இருந்தது. இப்போது அவை இல்லை. இந்த நேரத்தில் அங்குள்ள மக்களின் மனநிலையுடன் விளையாடுவது நியாயமற்றது.

உங்களால் இராணுவ வீரரை வீரர் என்று கூற முடியவில்லை. ஆனால் வேலைநிறுத்தப் போராட்டத்தின்போது இராணுவத்தைப் பயன்படுத்த முடியும். அவசர நிலைமைகளில் அவர்களிடமே ஓடிப் போக வேண்டியுள்ளது. எனினும் அவர்களுக்கு உரிய கௌரவத்தை வழங்க முடியவில்லை. அச்சுறுத்தல் விடுத்து அரசைக் கொண்டு செல்லவே முயற்சிக்கின்றீர்கள்.

அரகலய போராட்டக் காலத்தில் ஊர்சாகப்படுத்தி இப்போது 12 பேர் தூக்கு மேடைக்குப் போயுள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்துங்கள். நாட்டில் தலைதூக்கியுள்ள பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள் என்று கோரிக்கை விடுகின்றோம்.” – என்றார்.



# மீண்டும் இனவாதத் தீயை மூட்ட இங்கு இடமளிக்கப்படமாட்டாது!

## அமைச்சர் சந்திரசேகர் எச்சரிக்கை

"வங்குரோத்தடைந்த அரசியல்வாதிகள் நாட்டில் மீண்டும் இனவாதம் மற்றும் மதவாதத்தைத் தூண்டுவதற்கு முற்படுகின்றனர். இதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது."

– இவ்வாறு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையில் காலகாலமாக இனவாதப் பிரச்சினைகள் மேலோங்கியே காணப்பட்டன. தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் வஞ்சிக்கப்பட்டனர். ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

எனினும், நாடாளுமன்றத்தில் சலுகைகளைப் பெற்றுக்கொண்டு வாழ்ந்த அரசியல்வாதிகள் இன நல்லிணக்கத்தை மற்றும் மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

மாறாக இன ரீதியான பாகுபாட்டுக்குத் தீனி போடுபவர்களாகவே செயற்பட்டனர். இப்படியானவர்களுக்கு மக்களின் வரிப் பணத்தில் சலுகைகள் எதற்கு? எனவே, ஓய்வூதியம் தேவை இல்லை." – என்றார்.




## குருநாகலில் கோர விபத்து

# தனியார் பஸ்ஸுடன் மோதி ஓட்டோ சாரதி பரிதாபப் பலி!

குருநாகல், நாரம்மலை பகுதியில் தனியார் பஸ்ஸும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் ஓட்டோ சாரதி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை இடம்பெற்ற இந்த விபத்தில், வாரியப்பொலை பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

நாரம்மலை பிரதான வீதியில் பயணித்த தனியார் பஸ்ஸும், எதிரே வந்த ஓட்டோவும் எதிர்பாராத விதமாக மோதியதில் ஓட்டோ பலத்த சேதமடைந்தது.

விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோ சாரதியை அப்பகுதி மக்கள் மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த நாரம்மலை பொலிஸார், தனியார் பஸ்ஸின் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## விசர்நாய்க் கடிப் பாதிப்பு

இலங்கையில் விசர்நாய்க்கடி நோய் அச்சுறுத்தல் தொடர்ந்து நீடித்து வருவதாகவும், இதுவரையில் 14 மரணங்கள் பதிவாகியுள்ளன எனவும் தெரிவித்துள்ள சுகாதார அதிகாரிகள், விலங்குகள் கடித்தால் உடனடியாக மருத்துவ சிகிச்சையைப் பெறுமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இலங்கையில் 2025 ஆம் ஆண்டளவில் விசர்நாய்க்கடி நோயை முற்றாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அறிவித்து, 2019 இற்கு முன்பிருந்தே திட்டங்கள் தீட்டப்பட்டு, முஸ்தீபுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

ஆனால், அந்த முயற்சி இன்னும் வெற்றியளிக்கவில்லை.

விசர்நாய்க்கடி நோய் நூறு சதவீதம் மரணத்தை ஏற்படுத்தக்கூடியது என்றாலும், அதனை முழுமையாகத் தடுக்க முடியும் என்கின்றன சுகாதாரத் தரப்புகள்.

2025 இல் இலக்கு வைத்து செய்து முடிக்க முடியாமல் போன விடயத்தை 2030 இல் எட்டுவதற்கு தற்போது இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் சமூக விசேட வைத்திய நிபுணர் மருத்துவர் அதுலலியனபத்திரன இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் விசர்நாய்க்கடி நோய் நூறு சதவீதம் மரணத்தை ஏற்படுத்தக்கூடியது என்றாலும், அதனை முழுமையாகத் தடுக்க முடியும் எனக் குறிப்பிட்டார். 2030 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் விசர்நாய்க்கடி நோயினால் ஏற்படும் மரணங்களைப் பூச்சியமாகக் குறைப்பதே இலக்காகும் எனவும் அவர் சொன்னார்.

விசர் நாய்க் கடியினால் அண்மையில் ஏற்பட்ட மரணங்களில் பெரும்பாலானவை புத்தளம், குருநாகல் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் பதிவாகியுள்ளன.

இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 250,000 விலங்குக் கடிச் சம்பவங்கள் பதிவாகின்றன, இதில் பெரும்பாலானவை நாய்க்கடிகளாகும். கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் நாய்க்கடி சம்பவங்கள் அதிகரித்துள்ளமை அண்மைய மரணங்களுக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

விசர் நாய்க்கடி நோய் அச்சுறுத்தலில் இருந்து சமூகத்தப்தைப் பாதுகாக்கும் விடயத்தில் இரண்டு தரப்பு ரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒன்று - நோய்க் கடிக்கு உள்ளாகும் மனிதர்களுக்குப் பாதுகாப்புச் சிகிச்சைகளை நேரத்துடனேயே செய்வது.

அடுத்தது - நோய்க் கடியை ஏற்படுத்தக் கூடிய செல்லப்பிராணிகளுக்குச் சரியான முறையில் தடுப்பூசிகளை முற்கூட்டியே ஏற்றுதல்.

விசர்நாய்க்கடி நோயைத் தடுக்க செல்லப் பிராணிகளுக்குச் சரியான முறையில் தடுப்பூசி ஏற்றுதல், விழிப்புணர்வை அதிகரித்தல், விலங்குகள் கடித்தவுடன் காலம் தாழ்த்தாது சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளுதல் போன்ற ஆலோசனைகளையும் நிபுணர்கள் வழங்கியுள்ளனர்.

சிறிய காயமாக இருந்தாலும் அதனைப் புறக்கணிக்க வேண்டாம் என்றும், மேலதிக மரணங்களைத் தவிர்க்க உடனடியாக மருத்துவ உதவியை நாடுமாறும் அதிகாரிகள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

# வடக்கு மாகாண நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு புதிய இடமாற்றக் கொள்கைக்கு ஆளுநர் இணக்கம்







வடக்கு மாகாண நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு தனித்துவமான புதிய இடமாற்றக் கொள்கையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வடபிராந்தியக் கிளையினருக்கும், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலிலேயே இத்தீர்மானம் எட்டப்பட்டது.

தற்போது முகாமைத்துவ அலுவலர்கள் சேவைக்கான பொதுவான இடமாற்றக் கொள்கையே பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்நிலையில், அதிசிறப்புத் தர முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கென தனியானதொரு இடமாற்றக் கொள்கை உருவாக்கப்பட வேண்டும் என்ற சங்கத்தின் கோரிக்கையை ஆளுநர் ஏற்றுக்கொண்டார். அதற்கமைய, புதிய கொள்கையை உருவாக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான கடமைப் பொறுப்புக்களைத் தெளிவாக வரையறுத்தல், சில திணைக்களங்களில் அவர்களுக்குரிய தனிப்பட்ட அலுவலக இடவசதிகளை உறுதி செய்தல் மற்றும் விசேட பயிற்சிகளை வழங்குதல் போன்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. இவற்றையும் ஏற்றுக்கொண்ட ஆளுநர், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களாகக் கடமையாற்றும் அதிசிறப்புத் தர உத்தியோகத்தர்கள், விடுமுறைக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதில் நிலவும் நடைமுறைச் சிக்கல்கள் குறித்தும் ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. மேலும், செயலாளர்கள் உத்தியோகபூர்வ நாட்குறிப்பை பேணுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வது தொடர்பிலும் சாதகமாகப் பரிசீலிக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

இக்கலந்துரையாடலில்வடக்குமாகாண ஆளுநரின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்), மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மற்றும் அகில இலங்கை நிர்வாக உத்தியோகத்தர்கள் சங்கத்தின் வடபிராந்தியக் கிளைப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# ஐ.எம்.எவ். முகாமைத்துவ பணிப்பாளர் இலங்கை மத்திய வங்கிக்கு விஜயம்






மத்திய வங்கியின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா மத்திய வங்கிக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க ஐ.எம்.எப் வழங்கிய கடன் வசதி மற்றும் கடன் மறுசீரமைப்பு உதவிகளுக்காக ஆளுநர் நந்தலால் வீரசிங்க நன்றியைத் தெரிவித்தார்.

தற்போதைய ஐ.எம்.எவ் திட்டத்தின் கீழ் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தை ஒரு வெற்றிக் கதை என ஜோர்ஜீவா பாராட்டியுள்ளார்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதில் மத்திய வங்கியின் பங்களிப்பை அங்கீகரித்த அவர், கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மூலம் நாடு உயர் வளர்ச்சியை எட்டும் என நம்பிக்கை தெரிவித்தார்.



# ஹம்பாந்தோட்டை - மாத்தறை பிரதான வீதியில் இரு பஸ்கள் மோதி விபத்து; 25 பேருக்குக் காயம்

ஹம்பாந்தோட்டை – மாத்தறை பிரதான வீதியின் பல்லேமலல பகுதியில் நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில், இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும், தனியார் பஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகின. அதிக் சுமார் 25 பேர் காயமடைந்து ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் மூன்று வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவித்த பொலிஸார், அவர்களில் இருவர் பெண்கள் எனவும் தகவல் வெளியிட்டனர்.

தெஹியத்தக்கண்டியிலிருந்து காலி நோக்கிப் பயணித்த இ.போ.ச பஸ், தனக்கு முன்னால் திஸ்ஸமஹாராமவிலிருந்து மாத்தறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ்ஸை முந்திச் செல்ல முயன்ற போது இ.போ.ச பஸ் தனியார் பஸ்ஸின் பின்பக்கத்தில் மோதி, வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் வீதியின் இடதுபுறத்திலிருந்த வர்த்தக நிலையத்தின் மதிலை உடைத்துக் கொண்டு சென்று நின்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற போது காலி மற்றும் தெஹியத்தக்கண்டிய இடையே பயணித்த பஸ்ஸில் சுமார் 57 பயணிகள் இருந்தனர் என ஹம்பாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

திஸ்ஸமஹாராம மற்றும் மாத்தறை இடையே பயணித்த பஸ்ஸில் இருந்த எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# அரச, தனியார் போக்குவரத்து நடவடிக்கையில் வடக்கு மாகாணத்தில் பாரிய மாற்றம் வருகிறது

## வடக்கு போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் கருத்துரை

வட மாகாணத்தில் அரச, தனியார் போக்குவரத்து நடவடிக்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி மக்களுக்கு தரமான சேவையை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போக்குவரத்து என்பது நாட்டின் முதுகெலும்பாக அமைந்துள்ள ஒரு விடயமாக காணப்படுகின்றது. போக்குவரத்து உரிய முறையில் இருந்தால் மாத்திரமே பொருளாதாரமும் வெகுவாக வளர்ச்சியடையும்.



தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு போக்குவரத்து அமைச்சர் ஊடாகப் பல்வேறு விடயங்களை முன்னெடுத்து வருகின்றது.

அமைச்சர் நேரடியாக விஜயங்களை மேற்கொண்டு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது.

வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையை நான் பொறுப் பேற்றதில் இருந்து பல்வேறு விடயங்களை முன்னெடுத்து வருகின்றேன்.

வட மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் அரச, தனியார் போக்குவரத்தில் பாரியதொரு மாற்றத்தைக் கொண்டு வந்து மக்களுக்கு தரமான போக்குவரத்துச் சேவையை வழங்கும் முகமாக பல மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றோம்.

தரமான போக்குவரத்து சேவை ஒன்றை முன்னெடுக்க ஜி.பி.எஸ். மற்றும் சி.சி.டி.வி. கமராக்கள் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் அரச தனியார் போக்குவரத்தில் புதிய திட்டங்களும் அமுல்படுத்தப்பட உள்ளன.

27 போக்குவரத்துச் சங்கங்கள் வட மாகாணத்தில் தனித் தனியான யாப்பின் அடிப்படையில் இயங்கி வருகின்றன. குறிப்பாக வடக்கு மாகாண போக்குவரத்துக்கான தனி யாப்பு ஒன்று உருவாக்கப்பட உள்ளது. – என அவர் மேலும் தெரிவித்தார்.




# சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் கூட மட்டக்களப்பில் பக்தி இசை நிகழ்வு!

(வாலகிருஸ்ணா)

தென்னிந்தியாவின் பிரபல பாடகர் உன்னிக்கிருஷ்ணன் மற்றும் அவரது மகள் உத்திராக உன்னிக்கிருஷ்ணன் மற்றும் பாடகரும் நடிகருமான பிளக் பாண்டி கலந்துகொண்ட மாபெரும் பக்தி இசை நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி கடற்கரையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சீரற்ற காலநிலை நிலவி வரும் நிலையிலும் பல்லாயிரக்கணக்கான இசை ரசிகர்கள் மத்தியில் இந்த பக்தி இசை நிகழ்வு நடைபெற்றது.

மஹா சிவராத்திரியை முன்னிட்டு பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது..

மஹா சிவராத்திரியை முன்னிட்டு கல்லடி கடற்கரையில் 15ஆம் திகதி தொடக்கம் சிவலிங்க தரிசனம் நடைபெற்றுவந்த நிலையில் இறுதிநாளான நேற்று முன்தினம் மாலை இந்த பக்தி இசை நிகழ்வு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், டாக்டர் இ.சிறிநாத் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆன்மீக ரீதியான கருத்துரைகளும் இடம்பெற்றன. அதிதிகளும் கௌரவிக்கப்பட்டனர்.













# மிக நுட்பமான முறையில் கசிப்புக் காய்ச்சி விற்ற ஓய்வுபெற்ற அரச அலுவலருக்கு தண்டம் விதிப்பு

## மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் நடவடிக்கை

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு நாவற்குடா பகுதியில் வீட்டில் நுட்பமான முறையில் கசிப்புக் காய்ச்சி விற்பனை செய்துவந்த ஓய்வு பெற்ற விவசாய திணைக்கள உத்தியோகத்தர் ஒருவருக்கு நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றம் 26,000 ரூபா தண்டப்பணம் விதித்துள்ளது.

கடந்த 15ஆம் திகதி கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் மதுவரித் திணைக்களத்தின் மதுவரிப்பரிசோதகர் காண்டீபன் தலைமையிலான குழுவினர் நாவற்குடா,அம்பாள் வீதியில் தீடீர் சோதனை நடவடிக்கையௌ முன்னெடுத்தனர்.

இதன்போது வீடு ஒன்றில் கஸ் அடுப்பில் ஸ்ரீமர் வைக்கப்பட்டு நுட்பமானமுறையில் கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்வது கண்டறியப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்பின்போது கசிப்பு காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் மற்றும் 1600 மில்லிலீற்றர் கசிப்பு என்பன மீட்கப்பட்டன.

இது தொடர்பில் விவசாய திணைக்களத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற உத்தியோகத்தருக்கு எதிராக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் சட்ட நடவடிக்கையெடுக்கப்பட்டது.

அந்த நபர் குற்றவாளியாக இனங்காணப்பட்டமையால் அவருக்கு 26,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.





# கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கு அருகே இரண்டு முதலைக் குட்டிகள் பிடிபட்டன!

(ந.லோகதயாளன்)

கிளிநொச்சி இந்துக் கல்லூரி அருகில் காணப்பட்ட பள்ளத்தில் உள்ள நீர்த் தேக்கத்தில் இரண்டு முதலைக் குட்டிகள் வன ஜீவராசிகள் திணைக்களத் தினரால் உயிரோடு பிடிக்கப்பட்டன.

அங்கு முதலைக் குட்டிகள் இருக் கின்றமை கண்டுகொள்ளப்பட்டமையை அடுத்து அது தொடர்பில் மாவட்டச் செய லார் ஊடாக வன ஜீவராசிகள் கவனத் திற்கு கொண்டு செல்லப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் இரு முதலைக் குட்டிகளையும் உயிருடன் பிடித்தனர்.

உயிருடன் பிடிக்கப்பட்ட இரு முத லைக் குட்டிகளும் இரணைமடுக் குளத் தில் விடுவிக்கப்பட்டன.

அண்மையில் ஏற்பட்ட பெரு மழை யின்போது இரணைமடுக்குளம் திறக் கப்பட்டது. அப்போது குளத்தில் இருந்து இந்த முதலைக் குட்டிகள் இரண்டும் வெளிவந்திருக்கலாம் எனக் கருதப் படுகின்றது.










# மட்டு. கிரான் பாலத்தின் போக்குவரத்துத் துண்டிப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழையால் கிரான் பாலத்தின் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரின் வழிகாட்டுதலின் கீழ் கிரான் பிரதேச செயலகத்தினால் கிரான் முதல் புலிபாய்ந்தகல் வரையிலான படகு சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.கன மழையினால் பாலம் நீரில் மூழ்கி காணப்படுவதுடன் அறுவடைக்கு தயாரான வயல் நிலங்களும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.












# பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மாற்றீடின்றி நீக்கக் கோரி இன்று கையெழுத்துப் போராட்டம்

## யாழ். பல்கலைக்கழகச் சமூகம் முன்னெடுக்கின்றது

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவை மீளப் பெறவும், நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கவும் வலியுறுத்தி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகத்தினர் – பல்கலைக்கழக ஊழியர் சங்கம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன இணைந்து – இன்று கையெழுத்துப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கின்றனர்.

வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் சார்பில் நீதி அமைச்சருக்கு அனுப்பப்படவுள்ள பகிரங்க மனுவிற்காக இந்த ஒப்பமிடல் இயக்கம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவோம் என தேசிய மக்கள் சக்தி 2024ஆம் ஆண்டு தேர்தலில் வாக்குறுதியளித்திருந்தது. மேலும் 2025 செப்டெம்பரில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத் தொடரையொட்டி அச் சட்டம் நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும், தற்போதைய புதிய சட்ட வரைவு அந்த நிலைப்பாட்டிற்கு முரணானதாக உள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மனுவில் பின்வரும் முக்கியக் கோரிக்கைகள் அடங்கியுள்ளன:–


☆ நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

☆ பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் புதிய சட்ட வரைவு மீளப் பெறப்பட வேண்டும்.

☆ எந்தவொரு புதிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் கொண்டு வரப்படக் கூடாது.

☆ சனநாயக உரிமைகள் மற்றும் அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.


– இப்படி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகத்தினர் ஒருமித்தக் குரலில் இந்த மனு ஊடாக வலியுறுத்தவுள்ளனர்.



சிறிலங்காவின் நீதி அமைச்சருக்கு
வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பகிரங்க மனு:

பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபினை மீளப் பெறுதல்,
வலுவிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் மற்றும்
எந்தவொரு பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் தேவையில்லை !

Page 1 of 2



நன்றி

Page 2 of 2





# 1,400 கிலோ பீடி இலைகள் சிலாபத்தில் சிக்கின

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

இலங்கைக் கடற்படையினர், கடலோரக் காவல்படையுடன் இணைந்து, சிலாபம், முத்துபந்திய மற்றும் ஆரச்சிக்கட்டுவவில் உள்ள வைரம்கட்டுவ பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய சிறப்பு கூட்டு தேடுதல் நடவடிக்கையின் போது, நாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு கடத்தப்படவிருந்த சுமார் 1,407 கிலோ கிராம் பீடி இலைகளுடன் ஒரு லொறியை சந்தேக நபர்களுடன் மடக்கினர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படைக் கப்பலான தம்பபன்னியுடன் இணைக்கப்பட்ட உடப்புவ கடற்படைப் பிரிவினால், சிலாபத்தின் முத்துபந்திய கடல் பகுதியில் கடலோர காவல்படைத் துறையுடன் இணைந்து நடத்தப்பட்ட ஒரு நடவடிக்கையின் போது, முத்துபந்திய கடற்கரைப் பகுதியில் 1,071 கிலோகிராம் பீடி இலைகள் சிக்கின. ஆராச்சிகட்டுவ, வைரம்கட்டுவ பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது போக்குவரத்துக்கு தயாராக இருந்த 336 கிலோகிராம் பீடி இலைகளுடன் ஒரு லொறியை இரண்டு சந்தேக நபர்களை கடற்படையினர் மடக்கினர்.

மேலும், இந்த நடவடிக்கையின் மூலம் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் முறையே 44 மற்றும் 46 வயதுடைய சிலாபம், ராஜகதலுவ மற்றும் பன்கதெனியவைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். பீடி இலைப் பொதிக மற்றும் லொறி ஆகியவற்றுடன் சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக புத்தளம் கலால் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.





# யாழில் மருத்துவக் கழிவுகளை எரிக்க இரண்டாவது எரியூட்டி காக்கைதீவில்!

(என்.புவியரசன்)

யாழ்ப்பாணத்தில் கோம்பயன்மணல் மயானத்தில் உள்ள மருத்துவக் கழிவு எரியூட்டிக்கு மேலதிகமாக இரண்டாவது எரியூட்டியை காக்கைதீவில் அமைப்பதற்கு மாநகர சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச மருத்துவக் கழிவுகளை அகற்றும் நோக்கில் ஓர் எரியூட்டி (இன்சிலேற்றர்) பொருத்துவதற்கு மாநகர சபையால் முயற்சிக்கப்படுவது தொடர்பில் உடன் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பில் நேற்று மாலை ஆராயப்பட்டது.

கோம்பயன்மணல் மயானத்தில் உள்ள எரியூட்டிக்கு பதிலாக மேலும் ஓர் எரியூட்டியை பொருத்த யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடம், மாநகர சபை மற்றும் சுகாதாரத்துறையினருடன் சுற்றுச்சூழல் அதிகார சபையினரை நேற்றுக் கூடி ஆராய்ந்தனர்.

ஏற்கனவே கோம்பயன்மணல் மயானத்தில் பொருத்தப்பட்ட எரியூட்டி வைத்தியசாலையின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகின்றது. இந்த எரியூட்டியினால் தமக்கு பெரும் பாதிப்பு என அதன் அயலில் உள்ள மக்கள் தொடர்ச்சியாக முறைப்பட்டு வருகின்றனர்.

தற்போது யாழில் சேரும் அதிக பம்பஸ் கழிவுகள் மற்றும் சுகாதார நப்கின் கழிவகளை எரிப்பதற்கு மாநகர எல்லைக்குள் மேலும் ஒரு எரியூட்டி பொருத்துவதற்கே மாநகரசபையில் நேற்று மாலை ஓர் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட அனைவரும் எரியூட்டி அமைக்க சாதகமான கருத்துகளை தெரிவித்தமையோட்ய் தெரிவு செய்யும் இடத்தின் சூழலில் உள்ள மக்களை தெளிவூட்டுவது தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும் தீர்மானித்தனர்.

இவ்விடயத்தை ஒட்டி இன்றைய (நேற்றைய) முரசு பத்திரிகையில் தவறான செய்தி வந்துள்ளதாக மாநகர சபையின் உறுப்பினர் மயூரன் அங்கு தெரிவித்தார்.

இவற்றின் அடிப்படையில் மாநகர சபையின் எல்லைக்குள் உள்ள பல இடங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. காக்கைதீவு மீள் சுழற்சி மையத்தில் இந்த எரியூட்டியை அமைப்பதற்கான முன்னாயத்த நடவடிக்கையை எடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.





# இலங்கைக் கடற்படையால் படுகொலையுண்ட மீனவர்களின் நினைவேந்தல் கட்டைக்காட்டில்

**(மரியசீலன் திலைக்ஸ்)**

சிறிலங்காக் கடற்படையால் படுகொலை செய்யப்பட்ட கடற்றொழிலாளர்களின் 32ஆம் ஆண்டு நினைவேந்தல் கட்டைக்காடு சென்மேரிஸ் மைதானத்தில் நேற்று மாலை 4 மணி முதல் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

சுண்டிக்குளம் தொடுவாய் வாய்க்காலில் 1994 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி அதிகாலை, கடலில் கட்டுமரங்களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் சிறிலங்கா கடற்படையின் டோறாப் படகுகளில் வந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 10 கடற்றொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அந்தக் கடற்றொழிலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாக இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

நினைவேந்தல் நிகழ்வில் முதல் நிகழ்வாக படுகொலையை நினைவு கூரும் விதமாக அமைக்கப்படவுள்ள நினைவுத் தூபிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது

அதனை தொடர்ந்து உயிரிழந்தவரின் உறவினர் ஒருவர் மலர் மாலை அணிவிக்க, உயிரிழந்த மீனவர் ஒருவரின் தந்தையால் பொதுச் சிடர் ஏற்றப்பட ஏனைய சுடர்களை சம நேரத்தில் உறவுகள் ஏற்றிவைத்தனர்.

அத்துடன் மலர் அஞ்சலியை வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன் ஆரம்பித்துவைக்க அதனைத் தொடர்ந்து விருந்தினர்கள்,உறவுகள், பொது மக்களால் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு உணர்வெழுச்சியுடன் அந்த மீனவர்கள் நினைவு கூரப்பட்டனர்.

இந்நிகழ்வில் கட்டைக்காடு பங்குத் தந்தை வசந்தன், அருட்கலாநிதி ரமேஷ் அடிகளார், அருட்சகோதரன் ஜெனிஸ்ரன்,வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சுகிர்தன், பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ், காணி உரிமைக்கான மக்கள் அமைப்பின் தலைவர் முரளிதரன், சிரேஷ்ட ஊடகவியலாளர் காண்டிபன், சண்டிலிப்பாய் பிரதேச சபை உப தவிசாளர் தயாபரன், கிராம அபிவிருத்தி சங்க தலைவர் வசந்தன், பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



















## ராணுவத்தினருக்கு ரயில் சாரதி பயிற்சி:

# தொழிற்சங்கங்களின் எதிர்ப்புக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்க கண்டனம்



இராணுவத்தைச் சேர்ந்த 20 பேருக்கு ரயில் சாரதி பயிற்சி வழங்குவதற்கு ரயில்வே திணைக்களத்தின் சில தொழிற்சங்கங்கள் இடமளிக்காதமை குறித்து தான் வருத்தமடைவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


“அவசர நிலைமையொன்று ஏற்படும் போது, இராணுவத்தினருக்கு ரயில் சாரதி பயிற்சியை வழங்குவது காலத்திற்குப் பொருத்தமான செயலாகும்.

ஆனால், தொழிற்சங்கங்களின் செயல்பாடுகளை முடக்குவதற்காகவே இது செய்யப்படுவதாகத் தவறாகப் புரிந்துகொண்டு எதிர்ப்புத் தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

எமது நாட்டில் ஒரு நாளைக்கு சுமார் 280 ரயில் பயணங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இராணுவத்தைச் சேர்ந்த 20 பேருக்குப் பயிற்சி அளிப்பது அவர்களை நிரந்தர சாரதிகளாக நியமிப்பதற்கு அல்ல. இது ஒரு நியாயமற்ற தொழிற்சங்கப் போராட்டமாகவே அமையவிருந்தது.” என அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் சூறாவளியினால் ரயில் பாலங்கள் உடைந்தபோது, அவற்றை இராணுவத்தினரே திருத்தியமைத்தனர்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் இராணுவத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றால், அவசர காலத்தில் தொடருந்தை செலுத்துவதற்கு 20 பேருக்குப் பயிற்சி அளிப்பதில் என்ன தவறு இருக்கிறது? என அவர் கேள்வி எழுப்பினார்.



# தொற்றா நோய்களை தடுப்பதற்கு அரசாங்கம் அதிரடி நடவடிக்கை

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் இந்த ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில், நாடு முழுவதும் 250 புதிய ஆரோக்கிய மற்றும் நல்வாழ்வு மையங்களை நிறுவுவதற்காக 1,500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

‘ஆரோக்கியமான இலங்கை’ எனும் வேலைத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் இந்த முன்முயற்சியானது, ஏற்கனவே வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட முன்னோடித் திட்டத்தின் தொடர்ச்சியாகும்.

ஜனவரி மாதம் 21 மாவட்டங்களில் இரண்டாம் கட்டமாக 42 மையங்கள் திறக்கப்பட்ட முன்னோடித் திட்டத்தின் வெற்றிகரமான செயற்படுத்தலைத் தொடர்ந்து இந்த முயற்சி தொடங்கப்பட்டது.

முதல் கட்டமாக 2025 ஆம் ஆண்டில் கூடுதலாக 5 மையங்கள் அமைக்கப்பட்டன.

கண்டியில் அமைந்துள்ள கிரிந்த ஆரோக்கிய மற்றும் நல்வாழ்வு மையம், இத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட 43 ஆவது மையமாக உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் அதிகரித்து வரும் தொற்றா நோய்களின் சுமையை நிவர்த்தி செய்வதற்கும், தடுப்பு சுகாதார சேவையை வலுப்படுத்துவதற்கும், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் வழிகாட்டுதலின் கீழ் செயற்படுத்தப்படும் ‘ஆரோக்கியமான இலங்கை’ திட்டத்தின் கீழ் இந்த மையங்கள் அமைக்கப்படுகின்றன.



# ஜனாதிபதியை அவதூறாகப் பேசிய ஐவர் கைது; பொலிஸார் இடமாற்றம்

மத்தள அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலில் வைத்து ஜனாதிபதியை ஆபாச வார்த்தைகளால் திட்டி, அதனை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றிய கட்டான பகுதியைச் சேர்ந்த ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு பணியில் இருந்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உடனடியாக அமலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

கதிர்காமத்திற்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றில் ஆசனப் பட்டிகள் இல்லாத காரணத்தால், அதிவேக நெடுஞ்சாலைக்குள் நுழைய பொலிஸார் அனுமதிக்கவில்லை.


இதனால் பொலிஸ/க்கும் பஸ்ஸில் வந்தவர்களுக்கும் இடையே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டுள்ளது.

இதன்போது பஸ்ஸில் வந்தவர்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பெயரைக் குறிப்பிட்டு ஆபாச வார்த்தைகளால் திட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கைபேசியில் படம் பிடிக்கப்பட்டு சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ளது.

நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை பகிரங்கமாக அவதூறாகப் பேசியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்காகவே மேற்படி பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றப்பட்டுள்ளனர்.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் தலைமையகத்திற்கும், மற்றைய இரு அதிகாரிகள் கொட்டாவ மற்றும் கடவத்த காவல் நிலையங்களுக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.



# வங்கக்கடலில் காற்றழுத்த தாழ்வு நிலை: வளிமண்டலவியல் திணைக்களம் தகவல்

இலங்கையின் தென்கிழக்கே தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவும் காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று பிற்பகல் 3 மணியளவில் 'அம்பர்' நிற அவசர ஆலோசனையை வெளியிட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை, பல நாள் மீன்பிடி படகுகள் மற்றும் கடற்படை சமூகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் செல்வாக்கின் கீழ், பாதிக்கப்பட்ட கடல் பகுதிகளில் பலத்த மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும், மணிக்கு 50-60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசும் மற்றும் கடல் கொந்தளிப்பானது முதல் மிகவும் கொந்தளிப்பானது வரை எதிர்பார்க்கப்படுகிறது.

வளிமண்டலவியல் திணைக்களம் இந்தத் தொகுதி குறித்த கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளது.

கடற்றொழிலாளர்கள் மற்றும் கடற்படையினர் வானிலை முன்னறிவிப்புகள் மற்றும் அறிவித்தல்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மறு அறிவித்தல் வரும் வரை இந்த கடற்பரப்புகளில் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# போலி உறுதிப்பத்திரம் தயாரித்து மோசடி: இருவருக்கு 16 ஆண்டுகள் கடூழியச் சிறை

போலி உறுதிப்பத்திரங்களைத் தயாரித்து காணி மோசடியில் ஈடுபட்டமை உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்காக, வென்னப்புவ பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான சட்டத்தரணி ஒருவருக்கும் மற்றுமொருவருக்கும் தலா 16 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து சிலாபம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிலாபம் மேல் நீதிமன்ற நீதிபதி நவோமி தமரா விக்ரமசேகரவினால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

ரன்பட்டி தேவகே சமன் குமார மற்றும் சட்டத்தரணி வர்ணகுலசூரிய அலெக்ஸ் நிஷாந்த பெர்னாண்டோ ஆகியோருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு வைக்காலை பகுதியில் உள்ள காணி ஒன்றின் போலி உறுதிப்பத்திரத்தைத் தயாரித்து, பெண் ஒருவரை ஏமாற்றி 30 லட்சம் ரூபாவை மோசடி செய்தமை தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தது.

சமன் குமார என்பவருக்கு முதலாவது குற்றச்சாட்டுக்கு 3 ஆண்டுகள், இரண்டாவதுக்கு 3 ஆண்டுகள் மற்றும் நான்காவது குற்றச்சாட்டுக்கு 10 ஆண்டுகள் என மொத்தம் 16 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் 180,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சட்டத்தரணி அலெக்ஸ் நிஷாந்தவுக்கு முதலாவது குற்றச்சாட்டுக்கு 3 ஆண்டுகள், மூன்றாவதுக்கு 3 ஆண்டுகள் மற்றும் ஐந்தாவது குற்றச்சாட்டுக்கு 10 ஆண்டுகள் என மொத்தம் 16 ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் 1,80,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

குற்றவாளிகள் இருவரும் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு தலா 8 லட்சம் ரூபா வீதம் இழப்பீடு வழங்க வேண்டும். அதனைத் தவறவிட்டால் மேலதிகமாக 12 மாத சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும்.

தண்டனைக் காலத்தை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார்.

இந்தக் குற்றவாளிகளுக்கு எதிராக மேலும் 20 இற்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில், அவற்றை எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.




## ஜிந்துபிட்டி துப்பாக்கிச் சூடு:

# கடமையைச் செய்யத் தவறிய பொலிஸார் பணி இடைநீக்கம்

ஜிந்துபிட்டி பகுதியில் உள்ள சலூன் ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் போது, துப்பாக்கிதாரிகள் தப்பிச் சென்ற வேளையில் ஜீப் வண்டியின் கதவுக்கு பின்னால் மறைந்திருந்ததாகக் கூறப்படும் ஆட்டுப்பட்டித்தெரு பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜன்ட் மற்றும் கான்ஸ்டபிள் ஆகியோர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட அதிகாரிகள் இருவரும், கடமையைச் செய்யத் தவறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி இரவு இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இதில் ஒருவர் கொல்லப்பட்டார். மூவர் காயமடைந்தனர்.

துப்பாக்கிதாரிகள் மோட்டார் சைக்கிளில் கடந்து சென்றபோது, சார்ஜன்ட் தனது துப்பாக்கியுடன் ஜீப் கதவுக்கு பின்னால் மறைந்திருப்பதும், டி56 துப்பாக்கியை ஏந்திய கான்ஸ்டபிள் அதனை இயக்க முயற்சிப்பது போன்ற பாவனையில் இருப்பதும் சிசிரிவி கமராக்களில் பதிவாகியுள்ளது.

எனினும், கான்ஸ்டபிள் வழங்கிய வாக்குமூலங்கள் பொய்யானவை என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

துப்பாக்கிதாரிகளைத் தடுக்கவோ அல்லது கைது செய்யவோ நடவடிக்கை எடுக்காமைக்கு, அவர்களுடன் ஏதேனும் தொடர்பு இருக்கலாமா என்ற கோணத்தில் உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகள் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இ.தொ.கா உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இந்திய உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடல்













இந்திய அரசாங்கத்தின் ஏற்பாட்டில் தெலுங்கானா மாநிலத்தின் ஹைதராபாத் நகரில் 2026 ஜனவரி 19 முதல் 29 வரை நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கான வலுவூட்டும் விசேட செயலமர்வில் பங்கேற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்ந்த 20 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை சந்தித்து கலந்துரையாடினர்.

கொழும்பில் உள்ள, இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், இ.தொ.கா பொதுச்செயலாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான், தலைவர் செந்தில் தொண்டமான், இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலய அரசியல் பிரிவு ஆலோசகர் கலாநிதி ராம் பாபு உட்பட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சந்திப்பின்போது, ஹைதராபாத், ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஊட்டி ஆகிய இடங்களில் நடைபெற்ற செயலமர்வுகள் மற்றும் ஆய்வுப் பயணங்களின் மூலம் உறுப்பினர்கள் பெற்றுக்கொண்ட அனுபவங்கள், கற்றறிதல்கள் மற்றும் திறன் அபிவிருத்திகள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், நான்கு உறுப்பினர்கள் பொதுவான விளக்க உரை வழங்கியதுடன், மேலும் நான்கு பேர் நேர்காணல் வடிவிலும் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

இவ்வாறான பயிற்சி வாய்ப்புகளை எதிர்காலத்திலும் இ.தொ.கா பிரதிநிதிகளுக்காக அதிகரிக்க இந்திய தரப்புடன் தொடர்ந்து ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இருதரப்பும் கலந்துரையாடினர்.

அத்துடன், வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்கான “Overseas Citizenship of India” குடியுரிமை கடவுச்சீட்டினை, இந்திய வம்சாவளி மலையக மக்களும் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு ஜீவன் தொண்டமான் உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை வைத்தமைக்கு இந்திய தரப்பில் சாதகமான பதில் கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**பர்ஹான்**

| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்ட்ரிகள் |
|---|---|---|---|
| 100 | 58 | 04 | 11 |

| குழு-ஏ | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
| இந்தியா | 4 | 4 | 0 | 0 | 0 | 8 | 2.500 |
| பாகிஸ்தான் | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | 0.976 |
| ஐ.அமெரிக்கா | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | 0.788 |
| நெதர்லாந்து | 4 | 1 | 3 | 0 | 0 | 2 | -1.217 |
| நமீபியா | 4 | 0 | 4 | 0 | 0 | 0 | -3.108 |

# பாகிஸ்தானும் தகுதி!

## சுப்பர்-8இற்கு கடைசி அணியாக முன்னேறியது

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சுப்பர்-8 சுற்றுக்கு கடைசி அணியாக பாகிஸ்தான் தகுதிபெற்றது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கை மற்றும் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இந்தத் தொடரில் நேற்று நடைபெற்ற 35ஆவது லீக் போட்டியில் பாகிஸ்தான் மற்றும் நமீபியா அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அதன்படி பாகிஸ்தான் அணி, 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்டுகளை இழந்து 199 ஓட்டங்களைச் சேர்த்தது.

அந்த அணி சார்பாக பர்ஹான் சதம் (100) அடித்து அசத்தினார்.

பின்னர் 200 என்ற பாரிய இலக்கு நோக்கிக் களமிறங்கிய நமீபியா அணி, பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் திணறியது.

அந்த அணியில் லோரன் ஸ்டீன்காம்ப் (23), அலெக்சாண்டர் வோல்ஷெங்க் (20) ஆகியோர் தவிர ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்க எண்ணை எட்டாமல் ஆட்டமிழந்தனர்.

இதனால் நமீபியா அணி 17.3 ஓவர்களில் 97 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன்மூலம் பாகிஸ்தான் அணி, 102 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 'சூப்பர்-8' சுற்றுக்குத் தகுதி பெற்றது.

பாகிஸ்தான் சார்பாக பந்துவீச்சில் உஸ்மான் தாரிக் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக பாகிஸ்தானின் பர்ஹான் தெரிவானார்.



இந்தியா 193-6 | குழு-ஏ அஹமதாபாத் | நெதர்லாந்து 176-7

17 ஓட்டங்களால் இந்தியா வெற்றி



# பிரதமர் நரேந்திர மோடியுடன் சுந்தர் பிச்சை பேச்சுவார்த்தை



பிரதமர் நரேந்திர மோடியை, கூகுள் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர் பிச்சை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

டில்லியில் செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தாக்க உச்சிமாநாடு கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமானது. நாளை வரை இந்த மாநாடு நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்வதற்காக இந்தியா சென்றுள்ள சுந்தர் பிச்சை, நேற்று பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அவருடன் கூகுள் உயர் அதிகாரிகளும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

முன்னதாக சுந்தர் பிச்சை அளித்த பேட்டியில்,

“நாங்கள் மிகத் தெளிவான செய்தியுடன் வருகிறோம். நாங்கள் இந்தியாவுடன் ஒரு கூட்டாளியாக இருக்க விரும்புகிறோம். செயற்கை நுண்ணறிவு உடன் இந்தியாவுக்கு அசாதாரணமான பாதை மற்றும் வாய்ப்பு இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்த மாற்றத்துக்குத் தேவையான உள்கட்டமைப்புகள், அவற்றை இயக்குவதற்குத் தேவையான ஆற்றலில் முதலீடு செய்தல், தரவுத் தொகுப்புகளை வழங்குதல், உள்ளூர் கூட்டாளர்களுடன் ஆராய்ச்சி நடத்துதல், இந்தியாவின் திறமைகளுக்கு வாய்ப்புகளை உருவாக்குதல் என எங்கள் பங்கு முழு அளவில் இருக்கும். இந்தியாவின் செயற்கை நுண்ணறிவு லட்சியங்களுக்கு கூகுள் நீண்டகால அடிப்படையில் ஒத்துழைப்பை வழங்கும்.” என தெரிவித்தார்.

முன்னதாக சுந்தர் பிச்சை வெளியிட்ட எக்ஸ் பதிவில், “செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியா திரும்பியதில் மகிழ்ச்சி. எப்போதும் போல அன்பான வரவேற்பு இருந்தது. ஆவணங்களும் சிறப்பாக இருந்தன.” என குறிப்பிட்டுள்ளார்.

இந்த உச்சி மாநாடு தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் நரேந்திர மோடி,

“இந்தியாவின் தகவல் தொழில்நுட்பத் துறை நமது நாட்டின் சேவை மற்றும் ஏற்றுமதிக்கு முதுகெலும்பாகவும் பொருளாதார வளர்ச்சியின் முக்கிய உந்து சக்தியாகவும் இருந்து வருகிறது. இந்த துறைக்கு செயற்கை நுண்ணறிவு ஒரு மகத்தான சவாலையும் வாய்ப்பையும் முன்வைக்கிறது.

செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் அவுட்சோர்சிங் அலைகளால் இந்தியாவின் ஐடி துறை 2030ஆம் ஆண்டுக்குள் 400 பில்லியன் டாலர்களை எட்டும் என்று ஏ.ஐ. சந்தை கணிப்புகள் தெரிவிக்கின்றன.” என தெரிவித்துள்ளார்.

## விரைவில் நடைபெறும் சட்டசபைத் தேர்தல்

# தேர்தல் ஆணையர் சென்னைக்கு விஜயம்



தமிழக சட்டசபை தேர்தல் விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் சூழலில், சட்டசபை தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்த இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார், எதிர்வரும் 26, 27 ஆகிய திகதிகளில் சென்னை வருகை தருகிறார்

தமிழக சட்டசபை தேர்தல் களம் பரபரத்துக் கொண்டிருக்கிறது. சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகளை இந்திய தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில் மார்ச் 6 ஆம் திகதி தமிழ்நாட்டில் 6 இடங்களுக்கான ராஜ்யசபா தேர்தல் நடத்தப்பட இருக்கிறது

இந்நிலையில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார், சென்னையில் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள், மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்டோருடன் ஆலோசனை நடத்த உள்ளார்.

ஏற்கனவ, இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, எதிர்வரும் சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு, மாவட்டங்களில் வாக்காளர்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்களிப்பது மற்றும் வாக்கினை உறுதி செய்வது குறித்து செயல்முறை விளக்கங்களை மாவட்ட நிர்வாகங்கள் மேற்கொண்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் இறுதி வாக்காளர் பட்டியல் 23 ஆம் திகதி வெளியிடப்பட உள்ளது.

# செயற்கை நுண்ணறிவுத் தாக்க உச்சி மாநாடு ஒரு நாள் நீடிப்பு

பார்வையாளர்களின் அமோக வரவேற்பினை பெற்றதைத் தொடர்ந்து புது டில்லியில் நடைபெறும் 2026 ஆம் ஆண்டுக்கான செயற்கை நுண்ணறிவு தாக்க உச்சி மாநாடு நாளை மறுதினம் 21 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், பார்வையாளர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு மிகவும் வசதியான அனுபவத்தை உறுதி செய்வதற்காக, கண்காட்சி நேரங்கள் மாலை 6 மணியிலிருந்து இரவு 8 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், இன்று வியாழக்கிழமை நடைபெறும் வரையறுக்கப்பட்ட நிகழ்வுகள் காரணமாக, உச்சிமாநாடு அன்று பொதுமக்களுக்கு மூடப்படும்.

எனினும், கண்காட்சி பெப்ரவரி 20 மற்றும் 21 ஆகிய திகதிகளில் பொது மக்களின் பார்வைக்காக மீண்டும் திறக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கை நுண்ணறிவை மனித குலத்தின் நன்மைக்காகப் பொறுப்புணர்வுடன் பயன்படுத்துவதை நோக்காகக் கொண்டு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இதுவரை மூன்று லட்சத்திற்கும் மேற்பட்டோர் புது டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நடைபெறும் இந்த கண்காட்சியை பார்வையிடுவதற்காக பதிவு செய்துள்ளனர் என மத்திய தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இந்த உச்சிமாநாடு முன்னதாக நாளையுடன் முடிவடைய திட்டமிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# உக்ரைன் நிலப்பரப்புகளை விட்டுக்கொடுக்க முடியாது:

## ஜெனீவா பேச்சுவார்த்தையில் ஜெலென்ஸ்கி தெரிவிப்பு

உக்ரைன் – ரஷ்யாவிற்கு இடையிலான 4 ஆண்டுகாலப் போரை முடிவுக்குக் கொண்டு வர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் மத்தியஸ்தத்தில் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் இரண்டாம் நாள் முத்தரப்பு பேச்சுவார்த்தை நேற்று ஆரம்பமாகியுள்ளது.

அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் நடைபெறும் இந்தப் பேச்சுவார்த்தை மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இடம்பெற்று வருகின்றது.

உக்ரைன் மட்டும் விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டும் என ட்ரம்ப் வலியுறுத்துகின்றமை நீதியற்றது என உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி அதிருப்தி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவால் கைப்பற்றப்படாத டான்பாஸ் நிலப்பரப்புகளை விட்டுக் கொடுக்க முடியாது எனவும், அது தொடர்பான எந்த முடிவும் பொதுவாக்கெடுப்பு மூலமே தீர்மானிக்கப்படும் எனவும் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

முதலாம் நாள் பேச்சுவார்த்தை மிகவும் பதற்றமாக இருந்ததாக ரஷ்ய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. எனினும், நடைமுறைச் சிக்கல்கள் குறித்து ஆக்கபூர்வமாக ஆலோசிக்கப்பட்டதாக உக்ரைன் தரப்பு கூறியுள்ளது.




இதேவேளை இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வந்ததே பெரிய வெற்றி என அமெரிக்கத் தூதுவர் ஸ்டீவ் விட்காஃப் பாராட்டு தெரிவித்துள்ளார்.

# இரண்டு மணி நேரத்தில் முடிவுக்கு வந்த ரஷ்ய – உக்ரைன் அமைதிப் பேச்சுவார்த்தை



ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான அமைதி பேச்சுவார்த்தை இரண்டு மணி நேரத்தில் முடிவுக்கு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய மற்றும் உக்ரைன் பிரதிநிதிகள் புதிய சுற்று அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்காக சுவிட்சர்லாந்திற்கு வருகை தந்திருந்த நிலையில் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது. நேற்று முன்தினம் முதல் சுற்று பேச்சுவார்த்தை நிறைவடைந்து. நேற்று இரண்டாவது நாள் பேச்சுவார்த்தை இடம்பெற்றது.

ரஷ்யாவின் தூதுக்குழுவிற்கு விளாடிமிர் மெடின்ஸ்கி தலைமை தாங்கினார் புசுரு இராணுவ புலனாய்வு அமைப்பின் தலைவரான அட்மிரல் இகோர் கோஸ்ட்யுகோவும் இணைந்திருந்தார்.

உக்ரைனின் தேசிய கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு கவுன்சிலின் தலைவர் ருஸ்டம் உமேரோவ், மீண்டும் தலைமை பேச்சுவார்தையாளராக செயற்பட்டார்.

மத்திய கிழக்கு மற்றும் துருக்கியில் முந்தைய கூட்டங்கள் நடைபெற்ற நிலையில், ஒரு ஐரோப்பிய நாட்டில் உக்ரைன் அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவது இதுவே முதல் முறையாகும்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெறுவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை யுக்ரைனும் ஸெலென்ஸ்கியும்தான் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்திருந்தார். இந்நிலையில் அமெரிக்காவின் மத்தியஸ்தத்துடன் அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகியது.

இந்நிலையில் சந்திப்புகள் உண்மையில் கடினமாக இருந்தன, மேலும் ஏற்கனவே இறுதி கட்டத்தை எட்டியிருக்கக் கூடிய பேச்சுவார்த்தைகளை ரஷ்யா இழுத்தடிக்க முயற்சிப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி குற்றம் சாட்டியுள்ளார்.

ஜெலென்ஸ்கியின் கருத்துகளுக்கு சில நிமிடங்களுக்குப் பிறகு, பேச்சுவார்த்தைகள் முடிவடைந்ததாக ரஷ்யாவின் அரசு செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது.

ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகள் நடந்த ரஷ்ய தலைமை பேச்சாளர் விளாடிமிர் மெடின்ஸ்கி செய்தியாளர்களிடம், திகதி குறிப்பிடாமல் மேலும் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறும் என்று தெரிவித்தார். தொடர்ச்சியாக பேச்சுவார்தைகள் மூலமே தீர்வுக்கு செல்ல முடியும் என்றும் தெரிவித்தார்.

உக்ரேனிய தூதுக்குழுவின் தலைவர் ருஸ்டெம் உமெரோவ், முக்கியதுவம் வாய்ந்ததாக பேச்சுவார்த்தை அமைந்திருந்தது. மேலும் பேச்சுவார்த்தை நடத்தி இதனை முடிவுக்கு கொண்டுவருவோம் என தெரிவித்தார்.

அபுதாபியில் அமெரிக்க மத்தியஸ்தத்துடன் நடைபெற்ற இரண்டு சுற்று பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஜெனீவா கூட்டம் நடைபெற்றது, கிழக்கு உக்ரைன் பிரதேசத்தைக் கட்டுப்படுத்துவது போன்ற முக்கிய பிரச்சினைகளில் இரு தரப்பினரும் ஒரு ஒருங்கிணைந்த முடிவுக்கு வராததால் பேச்சுவார்த்தையில் இழுபறி நிலை நீடிக்கிறது.

# சீனத் தயாரிப்பு வாகனங்களுக்குத் தடை; போலந்து இராணுவம் நடவடிக்கை

சீனாவில் தயாரிக்கப்பட்ட வாகனங்கள் இராணுவத் தளங்களுக்குள் நுழைவதற்கு போலந்து இராணுவம் தடை விதித்துள்ளது.

சீனத் தயாரிப்பு வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள சென்சார்கள் மூலம் முக்கிய தரவுகள் சேகரிக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போலந்து இராணுவம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இராணுவத்தின் முக்கிய இடங்களுக்குள் இத்தகைய வாகனங்கள் அனுமதிக்கப்பட வேண்டுமெனில், அவற்றில் உள்ள சில குறிப்பிட்ட தொழில்நுட்பச் செயல்பாடுகள் முடக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இராணுவத் தளத்தின் பாதுகாப்பு விதிகளுக்கு உட்பட்டு, கூடுதல் பாதுகாப்பு நடைமுறைகள் உறுதி செய்யப்பட்ட பின்னரே வாகனங்கள் அனுமதிக்கப்படும்.

வாகனங்களில் உள்ள தகவல் மற்றும் பொழுதுபோக்கு அமைப்புகளுடன், நிறுவனத் தொலைபேசிகளை இணைப்பதற்கும் இராணுவம் தடை விதித்துள்ளது.

தற்காப்பு உட்கட்டமைப்புகளைப் பாதுகாப்பதற்காக நேட்டோ அமைப்பில் உள்ள நாடுகள் மற்றும் பிற நட்பு நாடுகள் பின்பற்றும் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு ஏற்பவே இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போலந்து இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள்- 19.02.2026




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களை தீட்டுங்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும்.இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் உறுதியும் ஆற்றலும் நிறைந்திருக்கும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்த நேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.பணப்புழக்கம் அதிகமாக காணப்படும்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய இந்நாளை பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் உறுதியானது. இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.உங்கள் துணையிடம் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். இன்று நிதி வளர்ச்சிக்கு உங்கள் ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

# இன்றைய ராசி பலன்கள்- 19.02.2026




இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனைகளை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.

தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும். எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்க வேண்டும்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.

# வன்னி ஆசிரியர்களின் இடமாற்றப் பிரச்சினை பிரதமருக்கு எடுத்துரைத்தார் சத்தியலிங்கம்

வன்னி மாவட்டங்களில் நீண்டகாலமாக நிலவும் ஆசிரிய இடமாற்ற பிரச்சினைகள் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் பிரதமரின் கவனத்திற்கு கொண்டுசென்றுள்ளார்.

கல்வி அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்கூட்டம் பிரதமரும், கல்வி அமைச்சருமாகிய ஹரிணி அமரசூரிய அவர்களின் தலைமையில் நேற்று நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் பிரதமரின் கவனத்திற்கு இந்த விடயங்களைத் தெரியப்படுத்தினார். அவர் அந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது பிரதேசங்களில் இடமாற்றங்களின் போது, குறிப்பாக ஆசிரியர் இடமாற்றங்களின்போது பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சிறந்த இடமாற்றக் கொள்கை ஒன்று இல்லாமையே இதற்குக் காரணமாகும். ஏனைய திணைக்களங்களில் வருடாந்த இடமாற்றங்களின் போது நீண்டாகாலமாக சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் செல்லத் தகுதியானோர் மற்றும் வெற்றிடமாகவுள்ள எண்ணிக்கை ஆகிய இரண்டினையும் சேர்த்தே இடமாற்ற எண்ணிக்கை அறிவிக்கப்படும். எனினும் கல்வித் திணைக்களத்தின் கீழ் அவ்வாறு நடைபெறுவதில்லை.



வெற்றிடங்களின் எண்ணிக்கை மாத்திரமே இடமாற்ற என்ணிக்கையாக அறிவிக்கப்படுகின்றது. இதனால் நீண்டகாலம் சேவையாற்றி இடமாற்றம் பெற்று செல்லவேண்டிய உத்தியோகத்தர்கள் பாதிக்கப்படுகின்றமையுடன், இடமாற்ற பிரச்சினைகளால் மாணவர்களும் பாதிக்கப்படுகின்றனர். ஆகையால் இடமாற்ற விடயங்களின் போது மேற்சொன்ன இரு விடயங்களும் பின்பற்றப்படவேண்டும். அவ்வாறு செய்தால் இடமாற்றங்களின் போது எதுவித பிரச்சினையும் ஏற்படாது. ஆகையால் அதனை மேற்கொள்ள வேண்டும். - எனக் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர், இது ஒரு சிறந்த யோசனை எனவும், இயலுமானவரையில் இந்த வருடம் இந்த யோசனையினை நடைமுறைப்படுத்த முயல்வதாகவும், அல்லது அடுத்த வருடம் தொடக்கம் நடைமுறைப்படுத்தி ஆசிரிய இடமாற்றங்களில் எதிர்காலத்தில் எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து வடக்கு மாகாணத்தில் கல்வித்திணைக்களங்களின் கீழ் பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டப்பட்டு பூரணப்படுத்தப்படாதுள்ள கட்டடங்கள் தொடர்பில் பிரதமரின் கவனத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் கொண்டு வந்தார். ஆட்சிக்கு வரும் அரசுகள் கடந்த காலங்களில் மாகாணப் பாடசாலைகளுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து கட்டடங்களை அமைத்தன. எனினும் அவற்றில் பல பூரணப்படுத்தப்படாதுள்ளன. இது தொடர்பில் கவனம் எடுக்கப்பட வேண்டும்.

வவுனியாவில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் கடந்தகால நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்ட தொழிநுட்ப கல்விக்கான ஆய்வுகூடம் 90 வீதமான வேலைகள் நிறைவுசெய்யப்பட்ட நிலையில் பாவிக்கமுடியாதுள்ளது. எஞ்சிய 10 வீதமான வேலைகளை நிறைவுசெய்து கொடுக்கும்பட்சத்தில் மாணவர்கள் அதனைப் பயன்படுத்தி பயனடைவர். ஆகவே இவ்விடயத்தில் அதிக கரிசனை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். - எனத் தெரிவித்தார்.

மேற்படி விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டு அந்த வேலைத்திட்டங்களை நிறைவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதமர் பதிலளித்திருந்தார்.